# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 13,554—1963 මාර්තු 8 වැනි සිකුරාදා—1963.3.8**

13,554 ம் இலக்கம்—1963 ம் ஆண்டு மாச்சு மாதம் 8 ந் திகதி வெள்ளிக்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானுவித அறிவித்தல்கள் .. | 131 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 131 | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### 1958 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டம்

**பிரிவு 2 (1) இன் கீழான கட்டளை**

1958 ம் ஆண்டின் 30 ம் இலக்கச் சட்டத்தினுலும், 1961 ம் ஆண்டின் 61 ம் இலக்கச் சட்டத்தினுலும் திருத்தியமைக்கப்பட்டுள்ள 1958 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவினுல் எனக்கு உரிமையாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு காணி, விவசாய, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் சாள்ஸ் பேர்சிவல் த சில்வா ஆகிய நான் இக்கட்டளை மூலம்—

(அ) 1963 ம் ஆண்டு மார்ச் மாதம் 9 ந் தேதியை மேலே இறுதியாகச் சொல்லப்பட்ட சட்டத்தின் 53 ம் பிரிவின் ஏற்பாடுகள் மட்டக்களப்பு பரிபாலன மாவட்டத்தில் நடைமுறைக்கு வரவேண்டிய தேதியாக நியமிக்கிறேன் ; அத்துடன்

(ஆ) 1963 ம் ஆண்டு ஏப்பிரில் மாதம் 1 ந் தேதியை மேலே சொல்லப்பட்ட 53 ம் பிரிவின் ஏற்பாடுகள் அனுரதபுரி, மாத்தளை ஆகிய பரிபாலன மாவட்டங்களில் நடைமுறைக்கு வரவேண்டிய தேதியாக நியமிக்கிறேன்.

சீ. பீ. டி சில்வா,
காணி, விவசாய, நீர்ப்பாசன,
மின்சார அமைச்சர்.

கொழும்பு,
1963 ம் ஹூ பங்குனி மீ 2 ந் உ.
3—395

### சம்பளச்சபைச் சட்டம்

**அறிவித்தல்**

சிலிர்த்ததும்பு மெத்தைத்தும்பு ! ஏற்றுமதித் தொழிற் சம்பளச்சபையில் முதலாளிகளின் பிரதிநிதியாக இருந்த திரு. எஸ். ஏ. சுரசேனு தாமாக விலகியதால் அவருக்குப்பதிலாக அங்கம் வகிக்க திரு. ஆர். பி. எல். ஈ. விஜயசூரிய என்பவரை, (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில் தேசியமய சேவை மந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென, 1943 ம் ஆண்டின் சம்பளச்சபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

வி. சா. ம. த மெல்
தொழில், தேசியமய சேவை மந்திரி காரியாலய நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1963 ம் ஹூ மாசி மீ 25 ந் உ.
3—359

## அரசாங்கப் பகுதிகளின் நானுவித அறிவித்தல்கள்

### ஈட்டுச் சட்டம்

(89 ம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தின் 3 (இ), 114 (2) ஆகிய பிரிவுகளின்படி எனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு, வர்த்தக அதிபராகிய, இனிகே றிச்சாட் வால்ரர் டி சில்வா ஆகிய நான், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக சிலோன் பினுன்ஸ் அன்ட் செக்கூறிற்றீஸ் லிமிடெட்டை அங்கீகாரம் பெற்ற நிதி உதவும் ஒரு தாபனமாக இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகிறேன்.

ஜீ. ஆர். டபிள்யூ. டி. சில்வா,
வர்த்தக அதிபர்.

கொழும்பு, 1963 ம் ஹூ பெப்ருவரி மீ 22 ந் உ.
3-216

### வனச் சட்டத்தின் கீழ் சேர்த்து வைக்கும் நிலையம்

வனச்சட்ட 30 (2) பிரிவின் கீழ்—1956 ம் வருட புதுச்சட்டவாக்கத்தின் 451 வது அத்தியாயம்—ஊறுகொடவத்தையிலுள்ள செயல்முறை விற்பனை நிலையம் மரம் சேர்த்துவைக்கும் ஒரு நிலையமாகக் கருதப்படும்.

ம. நமசிவாயம்,
சிரேஷ்ட வனபரிபாலன உத்தியோகத்தர்.

வன பரிபாலன அதிபர் காரியாலயம்,
கொழும்பு 2,
1963 ம் ஹூ மாச்சு மீ 2 ந் உ.
3—423

*வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

*வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3·30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3·30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.*

*அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம் கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.*

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.